[1987 நவம்பர் 17

6. அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஊ) நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(எ) நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

1987 நவம்பர் 17]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்டமுன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(எ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1987 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 47/1987) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஏ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 47/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

* திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்த சட்ட முன்வடிவில், சட்டமன்ற உறுப் பினர்களுக்கு தொலைபேசிக்காக கொடுக்கப்படும் தொகை

---

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.